# முதல்வர் அலுவலகம்
## அரசினர் பொறியியற் கல்லூரி, போடிநாயக்கனூர் - 625 582
## சுற்றறிக்கை எண்: 136/ க4/2026, நாள்: 07.01.2026

பொருள்: கணக்குப் பிரிவு - அரசினர் பொறியியற் கல்லூரி போடிநாயக்கனூர் - 2025 -2026ம் நிதி ஆண்டிற்கான வருமான வரி அறிக்கை (கைம்மாறு ஊதியம் மற்றும் மதிப்பூதியம் உட்பட) சமர்ப்பிக்கக் கோருதல் - தொடர்பாக.

**********

இக்கல்லூரியில் பணிபுரிந்து வரும் அனைத்து ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் அனைவரும் வருமானவரி அறிக்கையை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து 21.01.2026 - க்குள் படிவத்தை (ஒரு படிவம் மட்டும்) அனைத்து இணைப்புகளுடன் (with Self attested) முதல்வருக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அகத்தணிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க படிவம் சரிபார்க்கப்பட்ட பிறகு அடித்தல் திருத்தம் இல்லாமல் இரண்டு நகல்களாக அனைத்து இணைப்புகளுடன் (with Self attested) முதல்வருக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வருமான வரி அறிக்கையை 30.01.2026-க்குள் சமர்ப்பிக்காதவர்களுக்கு பிப்ரவரி 2026-ம் மாத சம்பளம் பெற்று வழங்கப்பட மாட்டாது. வருமான வரி படிவமானது அலுவலகத்தில் பெறப்பட்ட பின்னரே சம்பளம் பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 2025-2026-ம் நிதியாண்டிற்கான வருமானவரி அறிக்கையினை சமர்ப்பிக்கும் போது தாங்கள் பெற்ற சம்பளம், விடுப்பு ஒப்படைப்பு சம்பளம், ஆலோசனை மற்றும் பரிசோதனைப் பணிகள், தேர்வுகள், பகுதிநேர வகுப்புகள் எடுத்தமை, TNEA மாணவர் சேர்க்கை பணிகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்காகப் பெற்ற கைம்மாறு ஊதியங்கள் ஏதுமிருப்பின் அவையனைத்தையும் வருமான வரி அறிக்கையில் சேர்த்து, விடுதல்கள் ஏதுமின்றி முழுமையாக சுயசான்றுடன்(Self Declaration) அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் வருமான வரித்துறை அல்லது பிற தணிக்கைகளின் போது விடுதல்கள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட பணியாளரே அதற்கு முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கணவன் மனைவி இரண்டு பேரும் அரசு ஊழியராக இருப்பின் (Spouse Employee) தனியர் வருமானவரி கணக்குகள் சமர்ப்பிக்கும்போது, (கணவர் எனில் மனைவி, மனைவி எனில் கணவர்) Housing Loan, வீட்டு வாடகைப் பிடித்தம், LIC ஆகியவற்றை ஆண் பணியாளர் என்றால் மனைவி பணிபுரியும் இடத்தில் பிடித்தம் செய்யப்படவில்லை என்ற சான்றிதழும், பெண் பணியாளராக இருந்தால் கணவர் பணிபுரியும் இடத்தில் பிடித்தம் செய்யப்படவில்லை என்ற சான்றிதழும் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் வருமான வரி படிவம் 10E சமர்ப்பிக்க விருப்பமுள்ளவர்கள் **AUDITED 10E** மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இந்த நிதியாண்டில் வீட்டு வாடகை ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக செலுத்தி, அதற்குரிய வருமான வரி விலக்கு கோரப்படின் இணைப்பில் உள்ள 12BB படிவத்தில்

தி.பா.

உரிய விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, அதற்கான இரசீதுடன் வருமான வரி அறிக்கையுடன் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொழில்நுட்ப கல்வி இயக்குநரின் கடித எண்: 51099/எக்ஸ்1/2019, நாள்: 11.01.2022-கடிதத்தின்படி, பணியாளர்கள் காலிமனை வாங்க மற்றும் வீடு கட்டுவதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநரிடம் பெறப்பட்ட அனுமதி ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும் அல்லது அனுமதிக்கு விண்ணப்பித்துவிட்டு அந்த விண்ணப்பம் உயர் அலுவலர்களால் இயக்ககத்திற்கோ, அரசிற்கோ அனுப்பப்பட்ட கடித நகல் தவறாது இணைக்கப்பட வேண்டும். முன் அனுமதி பெறப்படாதபட்சத்தில் HBA அசல் HBA வட்டி வரிச் சலுகை பெற இயலாது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அத்துடன் சம்பளத்தில் பிடித்தம் செய்ய இயலாத வருமான வரித் தொகையை வங்கியில் செலுத்த நேரிடும்போது உரிய படிவத்தில் முதல்வர் அலுவலக TAN NUMBER (MRIG02359A)-ல் செலுத்துமாறும் தங்களின் PAN NUMBER-ல் செலுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் இதனை **முதன்மையாக** கருதி மேற்கண்ட தேதிக்குள் தவறாது வருமானவரி அறிக்கையினை முதல்வருக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இக்கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள்/அலுவலர்கள் பெற்றுள்ள கைம்மாறு ஊதியம் மற்றும் மதிப்பூதியத்திற்கான பட்டியலை தனியர்களது வருமான வரிப்படிவங்களைச் சரிபார்க்கும் பொருட்டு விடுதி கண்காணிப்பாளர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், TNEA & TFC பொறுப்பு அலுவலர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் (For Testing and Consultancy Amount) ஆகியோரும் முதல்வருக்கு சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

07/01/26

**முதல்வர்**

அரசினர் பொறியியல் கல்லூரி
போடிநாயக்கனூர் - 625 528.

**இணைப்பு :**

1. வருமானவரிப் படிவம் (Old and New Regime Forms)
2. 12BB படிவம்
3. சுயசான்று படிவம்

07/01/26

**பெறுநர் :**

1. அனைத்து துறைத்தலைவர்கள்
   (அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களிடையே
   தவறாது சுற்றுக்கு விடும் பொருட்டு )
2. விடுதி கண்காணிப்பாளர்கள்
3. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்
4. TNEA & TFC பொறுப்பு அலுவலர்கள்
5. அலுவலகச்சுற்றுக்கு

**நகல்:**

முதல்வர் மேசை/ முதல்வரின் நேர்முக உதவியாளர் /பொருளாளர்